[திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்] [1990 ஏப்ரல் 11

10-55 மணி.

அதுவும் சாத்தியமா, இல்லையா என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை. இதற்கிடையில் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கை அடிப்படையில், இப்போது சேலம் அருகில் ஒரு இடத்தைத் தேர்வு செய்து, அந்தக்கழிவுநீரை சுத்தப்படுத்தி, நகர் மையத்தில் ஓடும் திருமுடி முத்தாற்றில், சுத்தம் செய்யப்பட்ட தண்ணீரை விட்டு, பொட்டரத்தான்ஏரி, பூலவாரி ஏரி, வீரபாண்டி ஏரி, இப்படி பல ஏரிகளில் சுத்தப்படுத்திய தண்ணீரைக்கொடுத்து அதன் மூலம் பாசன வசதி செய்யவும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதைப் பற்றியும் இந்த அரசு இப்போது வேகமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், இந்த ஆட்சி வந்த பிறகு ஒன்றுமே செய்யவில்லை என்பதைப் போல இங்கே குற்றச்சாட்டாக கேள்வி கேட்கப்படுகிறது. இன்னொன்று, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான், இப்போது பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைவாக நிறை வேற்ற, அதுவும் மூன்று கோட்டமாகப் பிரித்து, விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று இந்தத் துறை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறார்.

7. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்பதாவது சட்டப் பேரவையில் பொது நிறுவனங்கள் குழு சார்பாக, 1989-90 ஆம் ஆண்டுக்கான குழுவின் நாற்பத்தைந்தாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன்வடிவு— ஆய்வு செய்தல் 1990 ஆம் ஆண்டு தமிழ் நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன்வடிவு.

8. ஒழுங்குப் பிரச்சினை.

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன்வடிவிற்குக் குடியரசுத் தலைவரின் முன் அனுமதி பெற வேண்டியது குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, இப்போது வரக்கூடிய பில் சம்பந்தமாக ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சி மன்றச் செயலர் அவர்கள்